இனிமையான குழந்தைகளே ! இப்போது ஸ்ரீமத் பிரகாரம் மனம் மற்றும் புத்தி அலைவதை நிறுத்துங்கள். ஒரு தந்தையிடம் சம்பந்தத்தை இணைத்து, புத்தி யோகத்தை இணைத்தால் அனைத்து பந்தனங்களும் முடிந்து போகும்.

கேள்வி: பாபா சங்கமத்தில் உங்களை என்ன முயற்சி செய்விக்கிறார்? முழுகல்பத்திலும் நடப்பது இல்லை?

பதில்: பந்தனங்களில் இருந்து புத்தியோகத்தை விலக்கி சம்பந்தத்தில் புத்தியோகத்தை இணைப் பதற்கான முயற்சி இப்போது பாபா உங்களை செய்விக்கிறார். இச்சமயம் தான் ஒரு புறம் சம்மந்தம் இருக்கிறது என்றால், இன்னொரு புறம் பந்தனம் இழுக்கிறது. இந்த யுத்தம் நடந்து கொண்டு இருக்கிறது. அசுரபந்தனத்தில் இருந்து ஈஸ்வரிய உறவில் வரக் கூடிய நேரம் இதுவே! ஏனென்றால் ஈஸ்வரனை உண்மையான ரூபத்தில் இப்பொழுது நீங்கள் அறிகிறீர்கள். ஈஸ்வரனை சர்வவியாபி என்று கூறுவதால் சம்பந்தம் இணைவதற்குப் பதிலாக துண்டிக்கப்படுகிறது. புத்தி விபரீதமாகி விடுகிறது. ஆகவே யதார்த்த அறிமுகம் கிடைத்து இருப்பதால் சம்பந்தத்தில் வர முயற்சி செய்யுங்கள்.

பாடல்: பொறுமையாக இரு மனமே .....

ஓம் சாந்தி. மனிதர்களின் மனம் மற்றும் புத்தி அதாவது ஆத்மாவில் இருக்கக் கூடிய மனம் மற்றும் புத்தி பலவிதமான பிரமைகளில் (கற்பனைகள்)அலைந்து கொண்டு இருக்கின்றது. இங்கே குழந்தைகளாகிய நீங்கள் பல விதமாக அலைவதி-ருந்து விடுபடு வதற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். என்னுடைய மனம் அலைகிறது என ஆத்மா கூறுகிறது. நீங்கள் அலைய வேண்டியதில்லை என்று பாபா கூறுகின்றார். அரை கல்பமாக உங்களுடைய மனம் புத்தி அலைந்து அலைந்து வீழ்ச்சி அடைந்து விட்டது. இப்பொழுது ஸ்ரீமத்படி மனம் மற்றும் புத்தி அலை வதை நிறுத்துங்கள். ஒரு புறம் புத்தி யோகத்தை இணையுங்கள். தேக அபிமானத்தில் வந்து பலர் அலைகிறார்கள். பலவிதமான உறவினர்கள், நண்பர்களின் பந்தனம் இருக்கின்றது. அவை அனைத்தையும் விட்டு விட்டு ஒருவருடன் சம்பந்தத்தை இணையுங்கள் என பாபா கூறுகின்றார். எங்களுடைய மனம் மிகவும் அலைகிறது என்கிறார்கள். ஒருவருடைய சம்பந்தத்தில் இருப்ப தில்லை. இப்படிப் பட்ட இனிமையிலும் இனிமையான எல்லையற்ற சுகத்தைக் கொடுக்கக் கூடிய பாபாவுடன் தொடர்பு உறுதியாக இருக்க வேண்டும். புத்தி இங்கும் அங்கும் அலையக் கூடாது என நாம் விரும்புகிறோம். அரைக் கல்பமாக அசுர வழிப்படி அலைந்து அலைந்து நீங்கள் துன்பம் அடைந்து விட்டீர்கள். இப்போது இப்படி அலைவதை விட்டு விடுங்கள். நான் ஆத்மா என்பதை மறந்ததால் நான் தேகம் என நினைக்கிறீர்கள். எனவே தேகத்துடன் சம்பந்தம் ஏற்பட்டு விடுகிறது. துண்டித்து விடுங்கள் என பாபா கூறவில்லை. ஆனால் இந்த மரண உலகத்தின் பந்தனத்தில் இருந்தாலும் ஈஸ்வரிய சம்பந்தத்தை நினையுங்கள். இது பந்தனம் ஆகும். அது சம்பந்தம் ஆகும். பந்தனம் என்பது துக்கத்தைத் தரக்கூடியது. சம்மந்தம் என்பது சுகத்தைக் கொடுக்கக்கூடியது. பந்தனம் மற்றும் சம்பந்தம் இரண்டும் வேறு வேறு ஆகும். பந்தனம் என்பது பழைய உலகத் தோடும், சம்பந்தம் என்பது புது உலகத்தோடும் தொடர்புடையது. இப்போது நீங்கள் புது உலகத்துக்கு அதிபதியாக ஆகக்

கூடியவர்கள் என்றால் புது உலகத்தோடு சம்பந்தத்தை இணை யுங்கள். இந்த பந்தனத்தில் இருந்தாலும் சம்பந்தத்திற்காக முயற்சி செய்யுங்கள். யாருடன் சம்பந்தம் வைக்க வேண்டும். மன்மனாபவ, மத்தியாஜிபவ மற்றும் எல்லையற்ற தந்தையுடன், எல்லையற்ற சுகத்தின் ஆஸ்தியோடு தொடர்பு வையுங்கள் என்று சொல்லக் கூடியவர்கள் யாரும் இல்லை. தந்தை தான் இந்த சம்பந்தத்தை இணைக்கின்றார். நீங்கள் பந்தனத்தில் இருக்கும் போது உங்களை முயற்சி செய்விக்கக்கூடிய மனிதர் எவரும் இல்லை. ஒரு தந்தை தான் பந்தனத்தில் இருந்து விடுவித்து சம்பந்தத்தில் அழைத்துச் செல்கிறார். மாயாவி இராஜ்ஜி யத்தில் பந்தனம் இருக்கிறது. இராம இராஜ்ஜியம் அல்லது ஈஸ்வரிய இராஜ்யத்தில் சம்பந்தம் இருக்கிறது. அதை ஈஸ்வரிய இராஜ்ஜியம் என்றும் இது அசுர இராஜ்யம் என்றும் கூறப் படுகிறது. ஏனென்றால், சத்யுகத்தை ஈஸ்வரன் உருவாக்குகிறார். அதில் உயர்ந்த பதவி பெற வைப்பதற்காக குழந்தை களாகிய உங்களை முயற்சி செய்ய வைத்துக் கொண்டு இருக்கின்றார். இப்பொழுது நீங்கள் சங்கமயுகத்தில் இருக்கிறீர்கள். சங்கமயுகத்தில் மட்டும் தான் சம்பந்தத்தின் முயற்சி நடக்கிறது. வேறு எந்த யுகத்திலும் இந்த முயற்சி நடப்பது இல்லை.

நான் வந்து பந்தனத்தில் இருந்து விடுவித்து சம்பந்தத்தில் புத்தியோகத்தை இணைக்க வைக்கிறேன் என பாபா கூறுகின்றார். சத்யுகத்தில் புதிய சம்பந்தத்தின் பிராப்தி, இப்போதைய முயற்சியினால் கிடைக்கிறது. யார் சம்பந்தத்தைப் பற்றி அறியவில்லையோ அவர்கள் எப்படி முயற்சி செய்வார்கள்? ஒரு புறம் சம்மந்தம் இழுக்கிறது. இன்னொரு புறம் பந்தனம் இழுக்கிறது. இது நிச்சயமாக நடக்கும். இந்த சண்டை நடக்கிறது. சத்யுகம் திரேதாவில் பந்தனத்தின் விஷயம் ஏதும் இல்லை. துவாபரயுகம் கலியுகத்தில் சம்பந்தத்தின் விஷயம் இல்லை. சங்கமத்தில் தான் சம்பந்தம் மற்றும் பந்தனத்தின் மீது கவனம் செலுத்தப் படுகிறது. இப்பொழுது அசுர பந்தனத்தில் இருந்து ஈஸ்வரிய சம்பந்தத்தில் சென்று கொண்டு இருக்கிறீர்கள் என நீங்கள் அறிகிறீர்கள். சங்கமம் தான் முயற்சி செய்வதற்கான யுகம் ஆகும். உங்களுக்குத் தான் பந்தனம் மற்றும் சம்பந்தத்தைப் பற்றி தெரியும். இராவணன் அசுர பந்தனத்தில் கொண்டு வந்து விட்டான். பிறகு ஈஸ்வர், ஈஸ்வரிய சம்பந்தத்தில் கொண்டு செல்கிறார். பாபா உங்களுடைய புத்தியோகத்தை தன்னுடன் இணைக்கிறார். இதனால் நீங்கள் சொர்க்கத் திற்கு அதிபதியாகிறீர்கள். பக்தியில் செய்த முயற்சிகள் உண்மை யற்றவை, உண்மையான முயற்சியை பரம்பிதா தான் செய்விக்கிறார். சர்வ வியாபி என்ற ஞானத்தால் பரமாத்மாவுடன் சம்பந்தம் இருக்க முடியாது. மேலும் துண்டிக்கப்பட்டு விடுகிறது. இப்பொழுது நீங்கள் ஒரு தந்தையுடன் புத்தியோகத்தை இணைத்து விட்டு மேலும் சொர்க்கம் வைகுண்டத்தின் இராஜ்யத்திற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர் கள். சாஸ்திரங்களிலே அர்சுணன் முன்பு பகவான் வாக்கு என்று எழுதிவிட்டனர். ஒரே ஒரு அர்சுணன் மட்டும் இருக்க முடியாது. பகவான் இராஜயோகத்தைப் பலருக்குக் கற்பித்து இருப்பார் அல்லவா? இல்லையென்றால் சொர்க்கத்தின் இராஜ்யம் எப்படி உருவாகும். உலகத்தில் நாங்கள் எதிர்காலத்தில் பல பிறவிகளுக்காக முயற்சி செய்து கொண்டு இருக் கின்றோம் என்று கூறக் கூடியவர்கள் யாரும் இல்லை. இதை பிராமணர்களாகிய நீங்கள் மட்டும் தான் செய்ய முடியும். நம்முடைய தெய்வீக இராஜ்ஜியம் டிராமா படி நிச்சயமாக உருவாக வேண்டும் என்பது நிச்சயமாகும். நாம் விரும்பவில்லை என்றால் கூட

நிச்சயமாக நடக்கும். ஸ்தாபனை நடக்காது என்பது கிடையாது. டிராமா நிச்சயமாக ஸ்தாபனை செய்விக்கும். டிராமா நம்மை நிச்சயமாக போன கல்பத்தைப் போன்றே முயற்சி செய்ய வைக்கும். ஆனால் ஸ்ரீமத் படி நடக்க வேண்டும். டிராமா எனக் கூறிக் கொண்டு தனது மனவழிப்படி நடக்கக் கூடாது. டிராமா படி பாரதம் சொர்க்க மாக நிச்சயமாக மாற வேண்டும், இருந்தாலும் உயர்ந்த பதவிக்காக ஸ்ரீமத்படி முயற்சி செய்விக் கிறார் என அறிகிறீர்கள். நேரத்தையும் தெரிவிக்கிறார் டிராமா பிளான் படி தந்தை வந்திருக்கிறார். இந்த சங்கமயுகம் முயற்சி செய்யக் கூடிய நேரம் என அவர் கூறுகின்றார். தூய்மையற்றவரில் இருந்து தூய்மையாக வேண்டும். சங்கமயுகத்திற்கு நிறைய மகிமைகள் இருக்கின்றது. அது நதிகள் மற்றும் கடலின் சங்கமம் ஆகும். உங்களுடைய இந்த சங்கமம் இப்போது தான் நடக்கிறது. நான் இந்த சங்கமயுகத்தில் தான் வருகிறேன் என பாபா கூறுகின்றார். முழு உலகமும் நிச்சயமாக அழுக்காக வேண்டி இருக்கின்றது. பிறகு அழுக்கிலிருந்து தூய்மையான உலகமாக நிச்சயமாக மாற வேண்டும். மனிதர்கள் அனைவரும் கணக்கு வழக்கை முடித்து விட்டு நிச்சயமாக தூய்மை யாக வேண்டும். இது மரணத்தின் நேரம் ஆகும். தூய்மையாகாமல் எந்த மணப்பெண்ணும் பரம்பிதா பரமாத்மா மணவாளனுடன் போக முடியாது. தேனீக்கள் பறக்கும் பொழுது அவைகளுக்கு ஒரு லீடர் இருக்கும். அதற்குப் பின் அனைத்து கூட்டமும் பறப்பதைப் பார்த்திருப்பீர்கள். இதுவும் அவ்வாறே ரோஜா மலராக மாற்றுவதற்காக மணவாளன் வந்திருக்கிறார். நீங்கள் அனைவரும் தூய்மையாகி விடுவீர்கள். பிறகு நான் போகும் பொழுது நீங்கள் அனைத்து ஆத்மாக்களும் மணப் பெண்களும் என் பின்னால் ஓடி வருவீர்கள். நாம் இந்த உடலை விட்டுவிட்டு மணவாளனுக்குப் பின்பு ஓடுவோம் என மணப்பெண்களாகிய நீங்கள் அறிகிறீர்கள். பகவான் ஒருவரே பக்தைகள் பலர். சிலர் யாரையோ ஏற்றுக் கொள்கிறார்கள். சிலர் வேறு யாரையோ ஏற்றுக் கொள்கிறார்கள். உலகம் உருவாக்கப்படவேயில்லை என சிலர் கூறுகிறார்கள். யார் எதைக் கூறினாலும் அதை ஏற்றுக் கொண்டனர். தனது வழி மற்றும் மனிதர்கள் சொல்லும் வழிக்கு பிரமை என கூறப் படுகிறது. தந்தை வந்து அனைத்து பிரமைகளையும் விடுவிக்கிறார். இதுவே துக்க உலகம் ஆகும். இப்போது சுகதாமத்திற்குப் போவதற்காக ஸ்ரீமத் கிடைத்துக் கொண்டு இருக்கின்றது. நிராகார தந்தையின் வழி கிடைத்துக் கொண்டு இருக்கிறது. சாகார உலகத்தில் இருக்கும் மனிதர்களிடம் ஒரு போதும் ஸ்ரீ மத் கிடைக்காது. இராவண இராஜ்ஜியத்தில் அசுர சம்பிரதாயத்தினருக்கு பரம்பிதா பரமாத்மாவைத் தவிர வேறு யாரும் சிரேஷ்ட மாவதற்காக ஸ்ரீமத் கொடுக்க முடியாது. ஒவ்வொரு நாளும் மனிதர்கள் இன்னும் கீழானவர் களாக மாறிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் அனைவருடையதும் இறங்கும் கலை யாகும். இப்பொழுது உங்களுடையது ஏறும் கலை யாகும். நீங்கள் பிராமணரில் இருந்து தேவதையாகிறீர்கள். பிறகு இறங்கும் கலை ஆரம்பமாகிறது. தேவதைகளில் இருந்து சத்திரியர், வைசியர், சூத்திரன் ஆகிறீர்கள். இப்போது இறங்கும் கலையாகும். நீங்கள் ஏறும் கலையில் இருந்தால் அனைவருக்கும் நன்மை. அனைவரும் முக்தி தாமத்திற்கு சென்றுவிடு வார்கள். மேலும் நீங்கள் ஜீவன் முக்திக்குச் சென்று விடுவீர்கள். பாரதம் ஒரு போதும் காலியாவதில்லை. சொர்க்கமாக இருக்கும் பொழுது வேறு எந்த கண்டமும் இருக்காது. இஸ்லாமியம் பௌத்தம் போன்றவை பிறகு தான் வருகின்றது. அவர்களுக்கு முன்பு சந்திரவம்ச இராஜ்ஜியம் இருந்தது. அவர்களுக்கு முன்பு சூரிய

வம்சத்தின் லட்சுமி நாராயணன் இராஜ்ஜியம் இருந்தது. கிறிஸ்தவர்கள் இல்லாத போது பௌத்தர்கள் இருந்தனர். பௌத்தர்கள் இல்லாத போது இஸ்லாமியர்கள் இருந்தனர். இஸ்லாமியார்கள் இல்லாத போது இராம இராஜ்ஜியம் இருந்தது. அவர்களுக்கு முன்பு சூரிய வம்சம் இருந்தது. இப்போது சூரிய வம்சம் சந்திர வம்சம் இரண்டு வம்சங்களும் இல்லை. பாபா வந்து மூன்று தர்மத்தையும் படைக்கிறார். நீங்கள் பிரம்மா முக வம்சாவளி உண்மையான பிராமணர், தேவதையாவதற்காக முயற்சி செய்து கொண்டு இருக்கிறீர்கள். சூத்திரர்கள் முயற்சி செய்வதில்லை. பிராமணர்களுக்குத் தான் பிரம்மா மூலமாக ஸ்ரீமத் கிடைக்கிறது. இதன் மூலமாக நீங்கள் சிரேஷ்டமான தேவதையாகிறீர்கள். இன்னும் சிறிது நேரம் இருக்கிறது. வினாசம் வந்தது என்றால் வந்தது. நிலைமை மோசமாகிக் கொண்டே இருக்கின்றது. அழிப்பதற்கு நேரம் ஆவதில்லை. ஒருவேளை ஒருவர் அணுகுண்டை போட்டார் என்றால், மற்றவரும் போட ஆரம்பித்து விடுவர். நீங்கள் சூட்சும வதனம், மூலவதனம், வைகுண்டத்தைப் பார்த்து வருகிறீர்கள். சாட்சாத்காரம் கிடைக்கிறது. கிருஷ்ண புரியின் சாட்சாத் காரம் கூட கிடைக்கின்றது. மற்றபடி அங்கே போக முடியாது. சிவபாபா உடன் அழைத்துச் செல்வதற்கான நேரமே போவதற்கான நேரமாகும். மற்றபடி காட்சிகள் கிடைக்கிறது.

இப்போது ஈஸ்வரனாகிய என்னுடன் உங்களுடைய சம்பந்தம் இணைந்திருக்கிறது. உங்களுடைய முதுகு இராவண இராஜ்யத்தின் பக்கமும், முகம் இராம இராஜ்யத்தின் பக்கமும் இருக்கின்றது. இப்பொழுது நீங்கள் பிராமண வர்ணத்தில் (குலம்) இருக்கிறீர்கள். வர்ணம் அழிவற்றதாகும். பிரஜாபிதா பிரம்மாவின் குழந்தைகள் பிராமணர்கள் நிச்சயம் வேண்டும். பிராமணர்களாகிய உங்களுக்கு ஆஸ்தி தாத்தாவிடம் இருந்து கிடைக்கிறது. சொர்க்கத்தை ஸ்தாபனை செய்யக் கூடியவர், இராஜயோகத்தை ஸ்தாபனை செய்பவர் சிவபாபா ஆவர். இந்த ஈஸ்வரிய ஆஸ்தி, அரைக்கல்பத்திற்கு கிடைக்கிறது. பிறகு அசுர ஆஸ்தி கிடைக்கிறது. ஏறும்கலை 21 பிறவிகளுக்கு பிறகு நிறைவடைகிறது. பிறகு அசுர இராஜ்யம் ஆரம்பமாகிறது. இந்த இராவணன் அசுரன் ஆவான். பரம்பிதா பரமாத்மாவிற்கு பிந்து என கூறப்படுகிறது. சிவனுடைய ரூபம் என்ன என்று உலகத்தினர் அறியவில்லை. அவர் இவ்வளவு பெரிய லிங்கமாக இருப்பார் என நினைக்கிறார்கள். ஆத்மாக்களாகிய உங்களின் ரூபம் புள்ளியாக இருப்பது போன்றே பரமாத்மாவாகிய என்னுடைய ரூபமும் புள்ளியாக இருக்கிறது என பரமாத்மா கூறுகின்றார். எப்படி நீங்கள் நட்சத்திரம் போன்று மின்னுகிறீர்களோ அவ்வாறே நானும் நட்சத்திரம் போன்று மின்னுகிறேன். நான் எப்போதும் பரந்தாமத்தில் இருக்கின்றேன், பிறப்பு இறப்பில் வருவது இல்லை. நீங்கள் பிறப்பு இறப்பில் வருகிறீர்கள். நான் பதீத பாவனன் என்றால் நிச்சயமாக நான் பரந்தாமத்தில் தான் இருக்க வேண்டியிருக்கிறது. இப்போது நான் உங்களை தூய்மையாக மாற்றிக் கொண்டு இருக் கின்றேன். மிகவும் நிறைய பிராப்தி இருக்கின்றது. 21 பிறவிகளுக்கு நீங்கள் உலகத்திற்கு அதிபதியாகிறீர்கள். பழைய உலகத்தை புத்தியோகத்தினால் மறக்க வேண்டியிருக்கின்றது. இந்த குழந்தை அல்லது இந்த செல்வத்தை ஈஸ்வரன் தான் கொடுத்தார் என்கிறார்கள். இது அனைத்தும் இப்போது முடியப்போகிறது என பாபா கூறுகின்றார். இதில் ஒன்றும் இல்லை. இதிலிருந்து பற்றை விலக்குங்கள், உங்களிடத்திலிருந்து பகவான் வாங்கி என்ன செய்வார். நீங்கள் பற்றுதலை மட்டும் நீக்குங்கள். இது மிகக் குறைவு,

நானே உங்களுக்கு இதற்குப் பதிலாக சொர்க்கத்தின் ஆஸ்தியைக் கொடுக்கின்றேன். அப்பா புதிய கட்டிடத்தை கட்டுகிறார் என்றால் பழையதிலிருந்து பற்றுதல் நீங்கி புதியதோடு இணைகிறது. இந்த பழைய உலகம் எரியப் போகின்றது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் அறிகிறீர்கள். இப்போது நாம் புதிய உலகத்திற்குச் செல்ல வேண்டும். ஆகவே பற்றுதலை நீக்கி புதிய தோடு இணையுங்கள். இரவுக்குப் பிறகு பகல், பகலுக்குப் பிறகு இரவு என்பது போல கலியுகத்திற்குப் பிறகு சத்யுகம் வரவேண்டும். இது எல்லையற்ற பகல் மற்றும் இரவின் விஷயம் ஆகும். அரைக்கல்பம் ஞானத்தின் பிராப்தி ஆகும். அரைக்கல்பம் பக்தியாகும். தமோபிரதானமாக இற்றுப் போன நிலையில் வரும் போது நான் வருகிறேன். இப்போது பக்தி கூட தூய்மையற்றதாக இருக்கின்றது. நான் ஒவ்வொரு அணுவிலும் கல்லிலும் முள்ளிலும் இருப்பதாகக் கூறி விடு கிறார்கள். கல்லை பூஜைக்காக வைக்கிறார்கள். கல்லைத் தான் சிவன் என்கிறார்கள். பூஜை செய்வதற்காக கற்களினால் வடிவங்களை உருவாக்கு கிறார்கள். இது பக்தி மார்க்கத்தின் விஷயங் களாகும். யாகம், தவம், தீர்த்த யாத்திரைகள் செய்தனர் சாஸ்திரங்களைப் படித்து வந்தனர். இவை களால் என்னை அடைய முடியாது என பாபா கூறுகின்றார். ஏ பதீத பாவனா! வாருங்கள் என நீங்களே கூறுகிறீர்கள். பதீத ஆத்மாக்கள் போக முடியாது. மிகவும் நன்றாகப் புரிய வைக்கின்றார். இப்பொழுது சிறிது பொறுத்துக் கொள்ளுங்கள் என்ற பாடல் கூட இருக்கின்றது. ஸ்ரீமத் படி நடந்து கொண்டே இருந்தால் உங்களுடைய அனைத்து துக்கங் களும் விலகிப் போகும். ஒரே ஒரு பரலௌகீக தந்தை சொர்க்கத்தின் ஆஸ்தியை அளிக்கிறார் அங்கே துக்கம் போன்ற எந்த விஷயமும் இல்லை. நீங்கள் 5000 வருடங்களுக்குப் பிறகு தந்தையிடமிருந்து ஆஸ்தியை அடைய வந்திருக்கிறீர்கள். யார் வந்து சிறிதளவு ஞானம் கேட்டாலும் கூட அவர்கள் சொர்க்கத்திற்கு வருவார்கள். ஆனால். உயர்ந்த பதவி பெற முடியாது. எவ்வளவு யோகத்தில் இருக்கிறீர் களோ அவ்வளவு தூய்மையாக மாறிக்கொண்டே போவீர்கள். மேலும் உயர்ந்த பதவியும் பெறுவீர்கள். சிவ தந்தையின் நினைவில் இருக்க வேண்டும். மேலும் சிருஷ்டி சக்கரத்தையும் சுழற்ற வேண்டும். மற்றவர்களுக்கும் இதன் மூலமாக உயர்ந்த பதவி கிடைக்கும் என்று புரிய வைக்க வேண்டும். அஜாமில் போன்ற பாவிகளும் திருந்தி விடுவார்கள் என பாபா கூறுகின்றார்.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லமான குழந்தைகளுக்கு, தாயும் தந்தையுமாகிய பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் காலை வணக்கம். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்தே.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. மரண உலகத்தின் பந்தனத்தில் இருந்தாலும் சுகத்தின் சம்பந்தத்தை நினைக்க வேண்டும். தன்னை ஆத்மா என புரிந்து கொண்டு மனம் புத்தியை இங்கங்கு அலைவதிலிருந்து விடுவிக்க வேண்டும்.

2. பழைய உலகம் அழியப்போகின்றது. ஆகவே இதிலிருந்து பற்றுதலை நீக்க வேண்டும். அனைத்து பிரமைகளில் இருந்தும் புத்தியோகத்தை விலக்கி ஸ்ரீமத் படி நடக்க வேண்டும்.

வரதானம் : எந்த ஒரு விஷயத்திற்கும் முற்றுப்புள்ளியின் பிந்தி வைத்து முடித்துவிடக் கூடிய சகஜயோகி ஆகுக.

சுலோகன்: அனைத்துப் பாயின்ட்டுகளின் சாரம் - பாயின்ட் ஆவது. பாயின்ட் ரூபத்தில் நிலைத் திருப் பீர்களானால் கேள்விக்குறியின் வரிசை முடிந்து போய்விடும். எந்த ஒரு வி^யத்திலும் கேள்வி வருமானால் பிந்தி (முற்றுப்புள்ளி) வைத்து விடுங்கள். முற்றுப்புள்ளி வைப்பதற் கான சகஜ சுலோகன் - எது நடந்ததோ, எது நடந்து கொண்டிருக்கிறதோ, எது நடக்க விருக்கிறதோ, அது நன்றாகவே நடக்கும். ஏனென்றால் சங்கமயுகம் என்பதே நல்லதிலும் மிக நல்லதாகும். நல்லது எனச் சொல்லும் போது நல்லதாகவே ஆகி விடும். இதன் மூலம் சகஜயோகி வாழ்க்கையை அனுபவம் செய்து கொண்டே இருப்பீர்கள்.

சுலோகன்: அன்பு தான் சகஜ நினைவுக்கான சாதனம். அன்பில் மூழ்கி விடுவது என்றால், சகஜயோகி ஆவதாகும்.